
T-UN-523
1646

உ
சிவமயம்

# திருமணஞ்சேரி
# ஸ்ரீ உத்வாகநாதசுவாமி ஆலய வரலாறு



வெளியிடுவோர்

**அருள்மிகு அருள்வள்ளநாத சுவாமி**
**(உத்வாகநாத சுவாமி) தேவஸ்தானம்**
**திருமணஞ்சேரி**

மாயூரம் வட்டம் தஞ்சை மாவட்டம் விலை ரூ. 1-00

| | |
|---|---|
| முதல் பதிப்பு | 1970 |
| இரண்டாம் பதிப்பு | 1972 |
| மூன்ரும் பதிப்பு | 1976 |
| நான்காம் பதிப்பு | 1977 |
| ஐந்தாம் பதிப்பு | 1978 |
| ஆரும் பதிப்பு | 1979 |
| ஏழாம் பதிப்பு | 1981 |


உ
சிவமயம்


இம் மலர் கடந்த சௌமிய வருஷம் தை மாதம்
9-ம் தேதி 22—1—1970 வியாழனன்று
ஸ்ரீ உத்வாகநாத சுவாமி ஆலய
மகா கும்பாபிஷேக நினைவு மலராக
தஞ்சை அறநிலையத் துணை ஆணையர்

**திரு T. N. சிங்காரவேலு, B.A., B.L.,**
**அவர்களின்**
முன்னிலையில்,

நாகை, அறநிலைய நிர்வாகத்துறை உதவி ஆணையர்
**திரு P. புலியூர் உடையான் அவர்களால்**
வெளியிடப்பட்டது.

அச்சிட்டோர்

வாஞெளி பிரஸ், மாயூரம்



உ

சிவமயம்

திருமணஞ்சேரி

# தல வரலாறு

வெளியிடுவோர்:

**அருள்மிகு அருள்வள்ளநாத சுவாமி**

**(அருள்மிகு உத்வாகநாத சுவாமி)**

**தேவஸ்தானம்**

**திருமணஞ்சேரி**

மாயூரம் வட்டம். தஞ்சாவூர் மாவட்டம்.

1981

( பதிப்புரிமை ஆலயத்தைச் சேர்ந்தது )

# உள்ளடக்கம்

1. தலச் சிறப்பு

2. உத்வாகநாதர் ஆலயம்

3. ஆலயச் சுற்றுக்கோயில்கள்

4. புராண வரலாறு

5. சம்பந்தர் திருப்பதிகம்

6. நாவுக்கரசர் திருப்பதிகம்

7. காப்புத் திருத்தாண்டகம்

**தா. வேணுகோபால்**, பி. ஏ.,
துணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
நாகப்பட்டினம்.

# அணிந்துரை

சோழ வளநாடு திருக்கோவில்கள் மிக்கமைந்த பேறு பெற்றது. அவ்வகைப் பேறுடைய சோழ நாட்டில் காவிரியின் வடபால் அமைந்த திருத்தலம் திருமணஞ்சேரி ஆகும். அப்பரும், ஆளுடைப்பிள்ளையும் பண்ணிசைத்த பழம்பதி அதுவாகும். அவ்வூரில், எழுந்தருளியுள்ள இறைவன் அருள்மிகு அருள்வள்ள நாதர் ஆவார். அவ்வூரின் தலவரலாறு அடியார்க்கோர் அருள் கனியாகும். எளிய நடையில் எழுச்சியுற அமையப் பெற்ற இந்நூல் சைவ மெய்யன்பர்களால் போற்றப் பெறும். அஃது உய்யும் நெறியளிக்கும் என உளமார நம்புகின்றேன்.

இச் சோழர் கால தேவாரப் பாடல் பெற்ற திருத்தலத்தில் உறையும் அருள்மிகு கல்யாண சுந்தரப் பெருமான் - உமாதேவியின் திருமேனி கண்டோரை ஈர்க்கும் வனப்பும் காந்த சக்தியும் கொண்டதாகும். அண்மைக் காலமாக இந்த மூர்த்தியை வழிபட்டு திருமணமாகாத கன்னிப்பெண்களின் குறைகள் தீர்ந்து அருள் பெற்றோரின் தொகை நாடோறும் கூடி வருகின்றது. வேண்டியதை வேண்டியாங்கு அருளும் இவ்வள்ளல் பெருமானை வழிபட்டு எல்லா நலன்களையும் பெற பக்தர்களை இச்சிறு நூல் மூலம் இத் திருக்கோவிலுக்கு வருகை தர வேண்டிக்கொள்கிறேன்.

(ஒப்பம்) **தா. வேணுகோபால்**

# பதிப்புரை

திருமணஞ்சேரி தல புராணம் என்னும் இச்சிறிய நூலில் இங்கு எழுத்தருளியிருக்கும் இறைவனின் பெருமைகளில் ஒரு பகுதியை மிகச் சுருக்கமாக விளக்கப்பட்டு இருக்கிறது. முன் பதிப்புக்களில் பதிக்கப்பட்டவைகளையே அதிக வேறுபாடு இல்லாமல் ஒரு சில திருத்தங்கள் தவிர அப்படியே பதிக்கப்பெறுகிறது.

அப்பரும், ஞானசம்பந்தரும் பாடிப் பரவிய இத் தலத்தின் பெருமைகளை இறையன்பர்கள் யாவரும் அறிய வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூல் வெளியிடப்படுகிறது.

இக்கோயில் வரலாற்றை அக்கினி புராணத்தில் காணலாம். இத்திருக்கோயிலில் 28 சோழர் கால கல் வெட்டுகள் படியெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒப்பற்ற அரிய பெருமைகளைக் கொண்ட **திருமணஞ்சேரி உத்வாகநாத சுவாமி திருக்கோயில்** தல புராணம் மறு பதிப்பு செய்ய திருவருள் துணைகொண்டு எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு பெரிதும் உவகை கொள்கிறோம்.


***மு. இளங்கோவன்,***
நிர்வாக அதிகாரி

***எஸ். சின்னையன்***
அறங்காவலர் குழுத் தலைவர்.

***G. ராமலிங்கம்,*** அறங்காவலர் குழு உறுப்பினர்
***T. M. கலியபெருமாள்,*** ,,
***K. சின்னதுரை,*** ,,
***க. ராமையன்,*** ,,

உ

# திருமணஞ்சேரி



அருள்மிகு

## அருள் வள்ளநாத சுவாமி

( உத்வாகநாத சுவாமி )

உ
சிவமயம்

# அருள்மிகு அருள்வள்ளநாத சுவாமி (உத்வாகநாதர்) தேவஸ்தானம்

### திருமணஞ்சேரி, மாயூரம் வட்டம்.

# தல வரலாறு.

## தலச் சிறப்பு.

வளம் கொழிக்கும், தமிழ் மணக்கும் தஞ்சை தரணியில் மாயவரத்தை அடுத்த குத்தாலம் நகரின் வடபால், சுமார் மூன்று கல் தொலேவில் அமையப்பெற்றது திருமணஞ்சேரி எனும் சிற்றூர்.

நற்றவப்பேறு பெற்ற நாயன்மார் பலரும் போற்றிப்பாடி யுள்ள அருள்வள்ளநாதர் திருக்கோயில் கொண்டு மங்காப் புகழுடன் ஒளி வீசிக் காட்சிதரும் சைவப் பெருந்தலம். கல்யாண சுந்தர மூர்த்தி திருவுளம் கொண்டு கோகிலாம்பாள் அம்பிகை தன்னேக் கைப்பிடித்து இங்குத் திருமணம் செய்து கொண்ட காரணத்தால் அந்தப் பெயருடைத்த நற்றலம்.

எம் பெருமான் திருக்கல்யாண வைபவத்திற்காக சப்தசாகரங்களும் மாலேயாக மாறிவந்ததாக ஐதீகம். சப்த சாகர தீர்த்தங்களும் திருக்கோயிலேச் சுற்றிலும் அகழியாகக் காட்சி தருகின்றன. தலப் பெருமைகள் பலவும் தன்னகத்தே கொண்டது இத்திருமணஞ்சேரி எனும் சிற்றூர். அப்பர் பெருமானலும், திருஞானசம்பந்தராலும் போற்றி புகழ்ந்து பாடல் பெற்றது இப்புண்ணியத்தலம்.

அறியாமை மேலீட்டால் மன்மதன் சர்வேசுவரன்மீது தன் கணேகளேத் தொடுக்க, அதனுல் அவரது நெற்றிக்கண் தீக்கு இலக்காயினன். தன் தவறுணர்ந்த அக்காமவேள் மனம் நொந்து, திருந்தி ஈசனேத் துதிக்க எம்பெருமானும் மனமிரங்கி மன்மதன் பேறுபெற வரமருளியதும் இத்தலத்தில்தான்.

வணிகப் பெண்டிர் இருவர் தங்கள் சந்ததிகளுக்குள் கொண்டும் கொடுத்தும் சம்பந்தம் செய்து கொள்ள விரும்பி வாக்களித்துக் கொண்டனர். பின்னர் ஒருத்தி வயிற்றில்

பிறந்தது ஆமையாக இருக்கக்கண்டு திகைத்தனர். இத்தலத்து ஆண்டவனிடத்தில் தங்கள் குறைகளை இவர்கள் முறையிட்டு கொள்ளவே எம்பெருமானும் அருள்கூர்ந்து ஆமையுருவை மாற்றி, மனித உருக்கொள்ளச் செய்து திருமணம் நடந்தேறச் செய்ததாக வரலாறு கூறுகிறது.

**திருமணம் கைகூடாது தடைபட்டு நிற்பவர்கள் இத் தல ஈசன் கல்யாண சுந்தரப்பெருமானுக்கு மாலை சாற்றி அர்ச்சனையும் செய்து வழிபட்டால், வெகு விரைவிலேயே திருமணமாகப் பெறுவர் என்பது இத்தல ஈசன் மகிமை களுள் மிகப் பிரசித்தமானது.**

ராகு கிரக தோஷ நிவர்த்திக்கும் இந்தத் தலம் சாலச் சிறப்புடைத்தது. ராகு தோஷத்தினல் பீடிக்கப்பட்டு, புத்திர பாக்கியம் கிட்டாத தம்பதியர் இங்குள்ள சப்தசாகர தீர்த்தத் தில் நீராடி இங்கு கோயில் கொண்டருளியுள்ள ராகு பகவா னுக்குப் பால் அபிஷேகமும், பால் பொங்கல் நிவேதனமும் செய்து சாப்பிட்டால் தமது ராகு தோஷம் நீங்கப் பெற்று புத்திரப்பேறு பெறுவர் என்பது அனுபவ உண்மை.

## ஸ்ரீ உத்வாகநாதர் ஆலயம்

காரண ஆகம முறைப்படி அமையப்பெற்றுள்ள இவ்வால யத்தின் மூலவர் ஸ்ரீ உத்வாகநாதர் ( அருள்வள்ளநாதர் ) அம்பிகை கோகிலாம்பாள் ( யாழினும் மென்மொழியாள் ) திருமணவரம் அருளும் அனுக்கிரக மூர்த்தியான கல்யாண சுந்தரர் திருமணக் கோலத்துடன் காட்சி தருகிருர்.

செம்பியன் மாதேவியாரால் இந்த ஆலயம் திருப்பணி செய்யப்பட்டதாகக் கல்வெட்டுகளினின்றும் அறியக் கிடக் கிறது. ராஜ கோபுரம் மல்லப்ப நாயக்கரால் செய்விக்கப் பட்டது.

முதலில் 1934-ம் ஆண்டிலும், பின்னர் 1947-ம் ஆண் டிலும் கும்பாபிஷேகம் நடந்தேறியது. சமீபத்தில் 1970-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் தேதியன்று சுமார் ஐம்பதி ஞயிரம் ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்று கும்பா பிஷேகம் நடைபெற்றது.

இவ்வாலயச் சிற்பங்கள் யாவும் மிகச் சிறப்புடையனவாக வும், இறைவழிபாட்டுச் சிறப்பை உணர்த்தும் வகையிலும் அரிய பொக்கிஷமாகக் காட்சி தருகின்றன.

வருடந்தோறும் சித்திரை மாதம் பூச நட்சத்திரத்தில் ஈசன் திருக்கல்யாண மகோற்சவம் மூன்று தினங்கள் வெகு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்நாட்களில் ஊரே மணக்கோலத்துடன் காட்சி தருகின்றது.

தினகால பூஜைகள் முறையாகவும், செம்மையாகவும் நடத்தப்பட்டு வருகின்றது. திருவனந்தல், காலசந்தி, உச்சிக் காலம், சாயரக்ஷை, அர்த்தஜாமம் ஆக ஐந்து கால பூஜைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது ஆலய நிர்வாகம் சென்னை அறநிலைய ஆட்சித் துறையின் நாகப்பட்டினம் துணை ஆணையர் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு, நிர்வாக அதிகாரி / தக்கார் ஒருவரால் குறைவின்றி பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

## ஆலயச் சுற்றுக்கோயில்கள்

கீழ்த்திசை நோக்கியிருக்கும் ஆலயத்தினுள் நுழையும் போது ராஜகோபுரத்தைத் தாண்டியதும் கணபதி காட்சி தருகின்றார். அடுத்து முறையே துவஜஸ்தம்பம், பலிபீடம் மகாநந்தி மண்டபம் அமையப்பெற்றுள்ளன.

கட்ட கோபுரத்தைத் தாண்டியதும் விநாயகர் சோபன மண்டபத்தின் முன்புற வாசலில் வரசித்தி விநாயகராகக் கோயில் கொண்டுள்ளார்.

கோயிலின் உட்புறம் துவார மண்டபத்தில் துவார பாலக நந்தியுடன் கர்ப்பக்கிரஹத்தில் ஸ்ரீ உத்வாகநாதர் [ அருள் வள்ள நாதர் ] அழகுறக் காட்சி தருகிறார் நிர்த்த மண்டபத்தில் நடராஜர் நடனமாடிக்கொண்டே பக்தர்களுக்கருள் பாலிக்கிறார். அவருக்கு எதிர்புறத்தில் கிழக்கு முகமாகக் கல்யாணசுந்தரர் கல்யாண கோலத்தில் காட்சியளிக்கிறார். இவர் இவ்வாலயத்தின் தனிப்பெரும் நாயகராவார்.

இவர்களின் அருளைப் பெற்றுக்கொண்டு வரும்போது ஸ்ரீ கோகிலாம்பாள் அம்பிகை (யாழினும் மென் மொழியாள்) மணமேடையில் மணப்பெண் இருக்க வேண்டிய முறையில் சுகாசனத்தில் காட்சி தருவது கண்களுக்கும் கருத்துக்கும் தனிப்பெரும் விருந்தாகும். அம்மன் சந்நதியின் மேற்புறம் சயன ஆலயம் அமையப்பெற்றுள்ளது.

பிறகு உட்பிரகாரத்தில் வரும்போது, நடராஜர் சபையின் நேர் எதிர்ப்புறம் சமயம் பரப்பிய தனிப்பெரும் குரவர் நால்வர் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தேவகோஷ்டத்தில் தென்

புறம் பிக்ஷாடனர், பால கணபதி, நடராஜர், யோக வடிவில் தட்சிணுமூர்த்தி, மேற்புறம் லிங்கோத்பவர்,. வடபுறம் பிர்மா ராகுபகவான் துர்க்கை, பழையாந்தகர் இருக்கின்றார்கள். ஆலயத்தின் கன்னி மூலேயில் அழக விநாயகரின் சந்நதியும், திருமாலேப் பத்தியில் சுப்பிரமணியர் சந்நதி, சுவாமியின் கருவறையின் மேற்புறம் உபய நாச்சியாருடன் மகாவிஷ்ணு சந்நதி, லக்ஷ்மி சந்நதி, பரதமகரிஷி. செம்பியன் மாதேவி. மல்லப்ப நாயக்கர் ஆகியோர் சுவாமியின் கருவறையின் நான்கு புறங்களிலும் இருக்கிறார்கள்.

பைரவர், சூரியன், சனீசுவரபகவான், பச்சையப்பநாதர் (ருத்ரவனேசுவரர்) பச்சையம்மை நாயகி (ருத்ரவனேசுவரி) இவர்கள் கீழ்த்திருமாலேப்பத்தியில் இருக்கின்றார்கள்.

பொதுவில் இவ்வாலயம் பற்பல அரிய திருவுருவங்களேத் தன்னகத்தேகொண்டு ஆலய வழிபாட்டுக்குச் சிறந்ததோர் இடமாக உளமும் மனமும் நிறைந்து வழிபட ஏற்றதாக அமைந்துள்ளது.

## புராண வரலாறு

உமை மங்கை தேவியார் கயிலேயில் ஒருநாள் ஈசனே வணங்கி, 'மற்றுமொருமுறை தங்களே மணந்து இன்புற வேண்டுமென' வரங்கேடக, சிவபிரானும் கருணேகொண்டு 'வரும் பிர்மகற்பத்தில் நின்னே மணம் புரிந்தருள்வேன்' என்றார்.

தன் விருப்பம் ஈடேற வெகுகாலம் தள்ளி ஈசன் நாள் குறிப்பதைக்கேட்டு வருத்தமுற்ற உமையவளும் எம் பெருமானிடம் சற்று அலட்சியமாக நடக்க தலேப்பட்டார் இதனுல் சிவபெருமான் சினங்கொண்டு உமாதேவியாரைப் பூவுலகில் பசுவாகி வாழப் பணித்தார்.

கோ உருக்கொண்ட உமையாள் தன் செயல் நினேந்து வருந்தி எம்பெருமானிடம் சாபவிமோசனம் கேட்டு மன்றுடவே எம்பெருமான் சினந்தணிந்து அருளியவாறு திருமகள், கலேமகள், இந்திராணி ஆகிய அமர மாதர் பலரும் கோ உருக் கொண்டு. உமாதேவியாருடன் பூவுலகில் அசுச்காடு, அரசங் காடு ஆகிய இடங்களில் உலவிவந்தனர். திருமால் பசு மேய்ப்போனுக உருவெடுத்து அப்பசுக்களேப் பராமரித்து வரலானுர்.

அம்பிகை பொழிந்த பாலால் தன் திருமேனி குளிரப் பெற்றும் குளம்பின் ஸ்பரிசத் தழும்பும் பெற்று மகிழ்ந்த சிவபிரான், உளம் கனிந்து அம்பிகை விரும்பியவாறு திருமணம் புரிந்து கொள்ளவும் திருவுளங்கொண்டு பரத மகரிஷி நடத்திய யாக வேள்விக் குண்டத்தில் தோன்றிய உமையாளை திருமணஞ்சேரியில் திருமணம் புரிந்து அருளினர் என்பது தலவரலாறு.

தேரழுந்தூரில் அம்பிகைக்கு பசு சாபம் கொடுக்கப் பட்டது. அசுக்காட்டில் அம்பிகை பசு உரு ஏற்றும், கோமலில் திருமால் பசு மேய்ப்போனக உருவெடுத்து பசுக்களை பராமரித்து வந்ததாகவும் திருக்குளம்பத்தில் ஈசன் பசுவின் குளம்புத் தழும்பை ஏற்றதாகவும், திருவாவடுதுறையில் பசுவுக்கு முக்தி கொடுக்கப்பட்டதாகவும், திருத்துருத்தி என்னும் குத்தாலத்தில் பரத மகரிஷி நடத்திய யாக வேதியில் உமை மங்கை தோன்றினர் எனவும் அறியக்கிடக்கின்றன.

திருவேள்விக்குடியில் திருமணத்திற்கான கங்கணதாரண மும் மங்கள ஸ்நானமும் செய்து, குறுமுலைப்பாளையில் பாலிகை ஸ்தாபனம் செய்தும், எதிர்கொள்பாடியில் இறைவனை எதிர்கொண்டழைத்தும், திருமணஞ்சேரியில் எம்பெருமான் உமைமங்கை தேவியரைக் கரம்பற்றித் திருமணம் செய்து கொண்டார். இத்தல வரலாற்றுப் பெருமைக்கு ஈடும் இணையுமற்ற சிறப்பாக இது அமைந்துள்ளது.

---

உ

சிவமயம்

**திருஞானசம்பந்த சுவாமிகள்**

**திருப்பதிகம்.**

திருமணஞ்சேரி.

**பண் - இந்தளம்.**

திருச்சிற்றம்பலம்.

அயிலாறு மம்பதனுர் புரமூன்றெய்து
குயிலாறு மென் மொழியா ளொருகூருகி
மயிலாறு மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றிநின்றூர்க் கில்லை பாவமே 1

விதியானை விண்ணவர் தாந்தொழு தேத்திய
நெதியானை நீள்சடை மேனிகழ் வித்தவான்
மதியானை வண்பொழில் சூழ்ந்த மணஞ்சேரிப்
பதியானைப் பாடவல்லார் வினைபாறுமே. 2

எய்ப்பானார்க் கின்புறு தேனளித் தூறிய
இப்பாலா யெனையு மாளவு ரியானை
வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின்றார் வினைவிடுமே. 3

விடையானை மேலுல கேழுமிப் பாரெல்லாம்
உடையானை யூழிதோ றூழியுள்ள தாய
படையானைப் பண்ணிசை பாடு மணஞ்சேரி
அடைவானை அடையவல்லார்க்கில்லை அல்லலே. 4

எறியார் பூங்கொன்றையினோடு மிளமத்தம்
வெறியாருஞ் செஞ்சடை யாரமிலைத் தானை
மறியாருங் கையுடை யானை மணஞ்சேரிச்
செறிவானைச் செப்பவல்லார்க் கிடர் சேராவே 5

மொழியானை முன்னொரு நான்மறை யாறங்கம்
பழியாமைப் பண்ணிசையான் பகர்வானை
வழியானை வானவரேத்து மணஞ்ரேி
இழியாமை யேத்தவல்லார்க் கெய்து மின்பமே. 6

எண்ணானை யெண்ணமர் சீரிமை யோர்கட்கு
கண்ணானைக் கண்ணொரு மூன்றுடையானை
மண்ணானை மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பெண்ணானைப் பேசநின்றார் பெரியோர்களே 7

எடுத்தானை யெழின் முடியெட்டு மிரண்டுந்தோள்
கெடுத்தானைக் கேடிலாச் செம்மையுடையானை
மடுத்தார வண்டிசைபாடு மணஞ்சேரி
பிடித்தாரப் பேணவல்லார் பெரியோர்களே 8

சொல்லானைத் தோற்றங் கண்டானு நெடுமாலும்
கல்லானைக் கற்றன சொல்லித் தொழுதோங்க
வல்லார் நன்மாதவரேத்து மணஞ்சேரி
எல்லா மாமெம் பெருமான் கழலேத்துமே. 9

சற்றேயுந் தாமறிவில் சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணமொர் செம்மை யுடையானை
வற்றாத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றாக வாழ்பவர் மேல்வினைப் பற்றாவே. 10

கண்ணாருங் காழியர்கோன் கருத்தார்வித்த
தண்ணார் சீர்ஞான சம்பந்தன் தமிழ் மாலை
மண்ணாரு மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி
பண்ணாரப் பாட வல்லார்க் கில்லை பரவமே. 11

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்

## திருநாவுக்கரசு சுவாமிகள்
## திருப்பதிகம்

திருமணஞ்சேரி

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்.

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ் திருவார் மணஞ்சேரியும்
வட்டவார் சடையார் வண்ணம் வாழ்த்துமே. 1

துன்னு வார்குழலா ளுமையா ளொடும்
பின்னு வார்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்மணஞ் சேரி மருந்தினை
உன்னு வார்வினை யாயின வோயுமே. 2

புற்றி லாடர வாட்டும் புனிதனார்
தெற்றி னார்புரந் தீயெழச் செற்றவர்
சுற்றி னார்மதில் சூழ்மணஞ் சேரியார்
பற்றி னாரவர் பற்றவர் காண்மினே. 3

மத்தமும் மதியும் வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசர வம்மணி
சித்தர் தீவணர் சீர்மணஞ் சேரியெம்
வித்தர் தாம் விரும்பாரை விருப்பரே. 4

துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்சுரந் தார்சடை மேலவர்
அள்ளலார் வயல்சூழ் மணம் சேரியெம்
வள்ளலார் கழல் வாழ்தல் வாழ்வாவதே. 5

நீர்பரந்த நிமிர் புன்சடை யின்மேல்
ஊர் பரந்த உகர மணிபவர்
சீர் பரந்த திருமணஞ் சேரியார்
ஏர் பரந்த ங்கிலங்கு சூலத்தரே. 6

சுண்ணத்தர் சுடுநீறுகந் தாடலார்
விண்ணத் தம்மதி சூடிய வேதியர்
மண்ணத் தம்முழவார் மணஞ்சேரியார்
வண்ணத் தம்முலை யாளுமை வண்ணரே. 7

துன்ன வாடையர் தூமழு வாளினர்
பின்னு செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில் சூழ்மணஞ் சேரியெம்
மன்ன னார்கழலே தொழ வாய்க்குமே. 8

சித்தர் தேவர்கண் மாலொடு நான்முகன்
புத்தர் தேரமண் கையர் புகழவே
மத்தர் தாமறியார் மணஞ் சேரியெம்
அத்தனா ரடியார்க் கல்ல லில்லையே. 9

கடுத்த மேனி யாக்கண் கயிலையை
எடுத்த வன்னெடு நீண்முடிப் பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரியரு ளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே. 10

திருச்சிற்றம்பலம்.

**காப்புத் திருத்தாண்டகம்,**

திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்.

தேனார் புனற் கெடில வீரட்டமும்
திருச்செம் பொன்பள்ளி திருப்பூவணம்
வானோர் வணங்கும் மணஞ்சேரியும்
மதிலுஞ்சை மாகாளம் வாரணாசி
ஏனோர்கள் ஏத்தும் வெகுளீச்சரம்
இலங்கார் பருப்பதற் தோடேணார் சோலைக்
கானார் மயிலார் கருமாரியும்
கறைமிடற்றார் தம்முடைய காப்புக்களே.

திருச்சிற்றம்பலம்.

## குறிப்பு:

திருமணம் ஆகவேண்டிப் பிரார்த்தித்துக் கொள்ள வருபவர்கள் கீழ்க்கண்ட பூஜை சாமான்கள் கொண்டு வரவேண்டும்

மஞ்சள், குங்குமம், பலகை மஞ்சள், சூடம், பத்தி, சர்க்கரை, தீப எண்ணெ, வெற்றிலை பாக்கு, வாழைப்பழம், எலுமிச்சைப்பழம் 2, மாலைகள் 3, சைலி புஷ்பம் 50 காசு, உதிரி புஷ்பம், சந்தனம், தேங்காய் 4.

திருமணம் ஆனபின்பு, பிரார்த்தனை செலுத்த வருபவர்கள் மேற்கண்ட சாமான்களுடன் மற்றொரு மாலையும், சர்க்கரைப் பொங்கல் நிவேதனத்திற்கு வேண்டிய சாமான்களுடன் வரவும்.

---

ரூ. 600/- [அறுநூறு ரூபாய் மட்டும்] நிலை வைப்புத் தொகையாக தேவஸ்தானத்தில் செலுத்தினால் அதில் கிடைக்கும் வட்டியைக் கொண்டு வருடத்தில் அவர் விரும்பும் ஒரு நாளில் 5 கால பூஜையும் அவர் பெயரில் செய்து பிரசாதம் அளிக்கப்படும்.